# அந்தணர் அல்லாதார் அர்ச்சகர் ஆகலாமா?

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி டி.ஏ.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

அந்தண அர்ச்சகர்களின் சிண்டைப் பிடித்துக் கொண்டு சட்டம் போட்டு மிரட்டுகிறது இன்றைய அரசாங்கம். ஆனால் பாரத அரசாங்க பாரம்பரியம் என்ன? ஆலயங்களை அரசு ஆண்டதா? அல்லது அரசினை ஆலயங்கள் வழி நடத்தினவா? அந்தநாள் அரசர்கள் ஆலய நிர்வாகத்தில் அக்கறை உள்ளவர்களாக இருந்தாலும் அதன் ஆட்சி அமைப்புகளில் அத்துமீறித் தலையிடவில்லை. கோயில் நிர்வாகங்களை ஆன்மீகத் தலைவர்களே முடிவு செய்தனர். களவு, கொலை, முதலிய அக்ரமங்களைக் கண்டித்து, வரி வசூலித்து, வேட்டைக்குச் சென்று, நாட்டு மக்களுக்கு நன்மை செய்வது தான் அந்த நாள் வேந்தனுடைய கடமை. அரசனுடைய தலையீட்டைக் கோவில் நிர்வாகமே எதிர்பார்த்தாலொழிய மன்னன் அங்கே தன் அதிகாரத்தைக் காட்ட மாட்டான். அவனே கட்டிய கோவிலாய் இருந்தாலும் மத சம்ப்ரதாயத் தலைவர்களின் அறிவுரைப் படிதான் கோயில் நிர்வாகம், நிதி நிலைமை முதலியவை செயல்பட்டன. அரசன் ஆன்மீகத்துக்கு அடிபணிந்து போனான்.

நாத்திகர்களும் நாடகக் காரர்களும் அன்று நாடாளவில்லை. பறவைக்காகத் தன் தசையை அரிந்து கொடுத்தவன், சத்தியத்துக்காகச் சுடுகாட்டுக்குப் போய்ப் பிணம் எரித்தவன், தந்தையின் சொல் காக்க வனம் புகுந்து துன்பப்பட்டவன், தவறாகக் கொலை தண்டனை வழங்கி விட்டோமே! என்று நெஞ்சு வெடித்து உயிர் விட்டவன், மக்களுக்கு அனைத்தையும் வாரிக் கொடுத்துவிட்டு மண் கலையத்தில் கஞ்சி குடித்தவன், 'நீ சரணடையாவிட்டால் நீ கட்டிய கோவிலை இடித்து விடுவேன்' என்று வெள்ளையன் மிரட்டிய போது கோயிலைக் காப்பதற்காக ஓடிவந்து தன் தலையைக் கொடுத்தவன் என்று இப்படித் தியாகமும், நேர்மையும், பரோபகாரமும், ஆன்மீகமும், உள்ளத்திலே செறிவாய் அமர்ந்த ஆளுநர்கள் தான் அன்று பாரதமெங்கும் காணப்பட்டார்கள். அவர்கள் தனத்தைக் கோவிலுக்கு கொடுத்தார்களே தவிர கோயிலிலிருந்து எடுக்க மாட்டார்கள். கோவில் சொத்து குலநாசம் என்ற பழமொழியை வேத வசனமாக எண்ணிப் பயந்தார்கள்.

இன்று காலம் மாறிவிட்டது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற பழமொழிக்கு ஏற்ப கோயில் நிதியையும் கைப்பந்து போல் உருட்டி விளையாடுகிறது இன்றைய அரசு. ஊர் நன்றாக இருக்க வேண்டுமானால் கோயில் செழிப்பாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை அன்று உடன்பாட்டு வழியில் நிரூபணமானது. இன்று எதிர்மறையில் நிரூபணமாகிறது. பெரும் வெள்ளங்களும், தண்ணீர்ப் பஞ்சமும், விலைவாசி ஏற்றமும், சுனாமியும், பூகம்பமும், பினாமி பட்டாக்களும், புதிது புதிதான வியாதிகளும், மருந்துக்கு அப்பாற்பட்ட உடல்

நோவுகளும், குடும்பங்களும், அல்ப ஆயுள் சாவுகளும், ஒழுக்கம் குறையும் இளைய தலைமுறையினர் வாழ்க்கையு நம் சமுதாயத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கெல்லாம் தீர்வு. ஐந்தாண்டு திட்டங்களோ சமூக மேம்பாட்டுத் திட்டங்களோ அல்ல. அவை இந்த பிரச்னைகளைத் தீர்க்கும் என்று நாம் நினைத்தால் அது பஞ்சைப் போட்டு நெருப்பை அணைக்கும் பைத்தியகாரத் தனம் தான். ஆணி வேரில் நீர் வார்க்காமல் மரம் ஏறி இலை இலையாகத் தண்ணீர் பாய்ச்சும் அறிவு கெட்ட தோட்டக்காரனைப் போல நாம் இன்றைய சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு வைத்தியம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். கிரேக்கம், சீனா, மத்ய கிழக்கு நாடுகள் ஆகியவற்றின் வரலாற்றிலே இந்தியாவின் கழிந்து போன பொற்காலம் பற்றி பக்கம் பக்கமாக எழுதப் பட்டிருக்கிறது. நம்நாட்டுச் சரித்திரத்தை நான் சான்று காட்டினால் தானே அதை புனைந்துரையென்றும், சுயப்ரதாபம் என்றும் சொல்வீர்கள்!

யுவாங் சுவாங்கினுடைய கையேடு களைப் படித்துப் பாருங்கள், பௌத்தர் களின் ஆன்மீக ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். அலெக்ஸாண்டர் இந்தியாவைப் பற்றிக் கூறிய வாசகங்களை வாசிக்கக் கேளுங்கள்.

நம்நாடு, கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாக உலகின் சொர்க்க புரியாக இருந்திருக்கிறது. இந்தியாவுக்கு ஒரு முறை வந்து போவதை உலகின் மற்ற நாட்டினர் ஆயுள் பெருமையாக நினைத்தார்கள். பொன்னும் ரத்தினங்களும் 17 முறை கஜினி கொள்ளையடித்தாலும் வற்றாத செல்வக் குவியல்களும், கல்வியும், ஞானமும், உடல் நலமும், சங்கீதமும் சாத்திரங்களும் இங்கே அன்று குவிந்துக் கிடக்கக் காரணம் என்ன? அனைத்துக்கும் வித்தாக, வேராக, இருந்தது இந்தியனின் ஆன்மிகம் தான். கோவிலுக்கும் குலதெய்வத்துக்கும் அர்ச்சர்களுக்கும், அந்தணனுக்கும் அவன் கொடுத்த முதல் மரியாதை அவனுக்கு நல்ல விளைவாகப் பலித்தது. அவனைப் பாரோர் போற்றத் தலை நிமிர்ந்து நடக்க வைத்தது. அவன் வெளிநாட்டானைக் கண்டு ஏங்கவில்லை. அமெரிக்காவின் டாலருக்கும் அரபு நாடுகளின் தினாருக்கும் இன்றும் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் அவலநிலை அன்று அவனுக்கில்லை. காரணம் அன்றைய கோவில்களும், கோயில் நிர்வாகமும் அர்ச்சகர்களும் ஆன்மீகச் சடங்குகளும் அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட சுதந்திரப் பறவைகளாக இருந்தன.

"போய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்றான் பாரதி. ஒரு அரசாங்கத்தின் கொள்கையைப் பொறுத்துத்தான் ஒரு சமுதாயத்தின் நிலைமையும் வளர்ச்சியும் நிர்ணயிக்கப் படுகின்றன. அர்ச்சகர்களின் வயிற்றில் அடிப்பதை ஆனந்த விளையாட்டாக மேற் கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் தம் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் இந்த நாட்டை அழிக்கிறார்களோ இல்லையோ தமக்கு அழிவைத் தேடிக் கொள்கிறார்கள். விஞ்ஞானத்தினால் வேறு நாடுகள் உயரலாம். ஆனால் இந்தியா உயர வேண்டுமானால் அது மெய் ஞானத்தினால் தான் முடியும். நம் ஆன்மீகத்தின் அஸ்தி வாரத்தை நாம் அசைத்துப் பார்த்தால் விதானம் இடிந்து விழப் போவது யார் தலையிலே அல்ல, நம் தலையில் தான்.